1. ஆமை நடை எங்கு ஆரம்பிக்கிறது?

ஆமை நடை நீலாங்கரை கடற்கரையில் ஆரம்பிக்கிறது. இங்கு வருவதற்கு கிழக்கு கடற்கரை சாலையில் சாந்தி மற்றும் வாசன் கண் மருத்துவனையை அடுத்து இடது புறம் திரும்ப வேண்டும். அந்த ரோட்டின் முன்னால் கபாலீஸ்வர் நகர் நுழைவு வாயில் என்று எழுதியிருக்கும். அந்த வாயிலின் உள்ளே கடற்கரை வரை செல்ல வேண்டும். இந்த வளைவு திருவான்மியூர் மருதீஸ்வரர் கோயிலில் இருந்து 5 கி.மீ தூரத்தில் இருக்கிறது. நீலாங்கரை கடற்கரையில் வாகனங்களை நிறுத்த முடியாது.

ஆமைநடை நீலாங்கரையில் ஆரம்பித்து 7 கி.மீ துரத்தில் பெசன்ட் நகர் (எலியட்ஸ்) கடற்கரையில் முடிவடைகிறது.

2. நீலாங்கரைக்கு எப்படி வருவது?

மற்ற நடைகளை போல இல்லாமல் இது ஒரு இடத்தில் ஆரம்பித்து மற்றொரு இடத்தில் முடிவடைகிறது. நடை பயணம் விடியற்காலையில் முடிவடையும் நாமும் மிகவும் சோர்வாக இருப்போம், எனவே வாகனங்களை பயணம் முடிவடைகிற இடத்தில் நிறுத்தி வைப்பது நல்லது.

பெசண்ட் நகர் 5 ஆவது அவின்யூ மற்றும் வேளாங்கண்ணி மாதாக்கோயிலில் இரு சக்கர வாகனங்கள் கட்டணம் செலுத்தி நிறுத்தும் வசதி இருக்கிறது. பிறகு 6D அல்லது 21D பேருந்தை பிடித்து திருவான்மியுருக்கு வந்து, அங்கிருந்து ஷேர் ஆட்டோவை பிடித்து நீலாங்கரைக்கு செல்லலாம். அல்லது அடையாறில் இருந்தும் ஷேர் ஆட்டோவை பிடித்து நீலாங்கரைக்கு செல்லலாம். பெசன்ட் நகரில் இருந்து ஆட்டோ எடுத்தால் அதிகமான காசு கேட்பார்கள். மேலும் 10 மணிக்கு மேல் பெசன்ட் நகரில் ஆட்டோ கிடைப்பதும் கடினம்.

பெசன்ட் நகரில் இருந்து வருபவர்கள், 10 மணிக்கு முன் பேருந்து நிறுத்தத்திற்கு வர வேண்டும்.

3. எப்போது நீலாங்கரையில் கூட வேண்டும்?

நாம் 11.15 க்கு நீலாங்கரை கடற்கரையில் இருக்க வேண்டும். நீங்கள் வருவற்கு தாமதமாகிறது என்றால் எங்களுக்கு தெரியபடுத்தி விட்டு மீண்டும் பதிவு செய்துக் கொண்டு அடுத்த பயணத்தில் கலந்துக் கொள்ளவும்.

4. நீலாங்கரையில் சந்தித்த பிறகு என்ன செய்வோம்?

கேள்வி பதில் நேரம் நடைபெறும். பொதுமக்கள் ஆமைகள், இயற்கை மற்றும் சுற்றுசூழல் பாதுகாப்பு சம்மந்தமாக கேள்விகள் கேட்டு கலந்துரையாடலில் பங்கு பெறும் விதமாக இந்த கலந்துரையாடல் இருக்கும்.

5. எல்லா இரவுகளிலும் ஆமை நடை நடைபெறுமா?

SSTCN தன்னார்வலர்கள் எல்லா இரவுகளும் நடப்பார்கள். வெள்ளி மற்றும் சனிக்கிழமை இரவுகள் மட்டும் பொதுமக்கள் பங்கேற்கலாம்.

6. ஆமை நடை எவ்வளவு நேரம் நடைபெறும்?

ஆமை நடையின் நேரம், வழியில் நாம் என்ன பார்க்கிறோம் என்பதை பொறுத்து வேறுபடும். நாம் எப்போதும் வால்மீகி நகர் கடற்கரையில் கொஞ்ச நேரம் இளைப்பாறுவேம். அங்கிருந்து காலை 3 மணிக்கு மீண்டும் நடக்க ஆரம்பிப்போம். காலை 4 அல்லது 5 மணிக்கு பெசன்ட் நகர் கடற்கரையை அடைவோம். நாம் வழியில் ஆமை கூடு கண்டுபிடித்தால் காலை 6 அல்லது 7 மணிக்கு கூட நடை முடிவடையும்.

7. நாங்கள் சாப்பிட எதாவது கொண்டு வரலாமா?

முடிந்த அளவிற்கு வேண்டாம், கொண்டு வந்தால் தூக்கிப் போடக் கூடிய பைகளிலோ, டப்பாக்களிலோ கொண்டு வர வேண்டாம்.

8. SSTCN குழு போக்குவரத்து ஏற்பாடு செய்கிறதா?

இல்லை. SSTCN குழு போக்குவரத்து ஏற்பாடு செய்வதில்லை. ஆனால் தனியாக வருபவர்கள், குறிப்பாக பெண்களாக இருந்தால், SSTCN தன்னார்வலருடன் பெசன்ட் நகர் 5ஆவது அவின்யூ வில் இரவு 9.45 மணிக்கு சேர்ந்துக் கொள்ளலாம்.

9. எவ்வளவு காலம் ஆமைகள் முட்டையிடும்

ஆமைகள் கூடு கட்டும் பருவம் ஜனவரி முதல் மார்ச் வரை. சில கண்டுபிடிக்காத கூடுகளில் இருந்து வெளி வரும் ஆமைக் குஞ்சுகளை கண்டுபிடித்து பாதுகாப்பாக கடலில் விட வேண்டி இருப்பதால் எங்களுடைய தன்னார்வலர்கள் ஏப்ரல் மாதம் வரை நடப்பார்கள்.

10. ஆமைகள் முட்டையிடுவதை பார்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

நீங்கள் வரும் பொழுது ஆமை முட்டையிடுவதை பார்க்க முடியும் என்று உறுதியாக சொல்ல முடியாது. சில சமயம் மொத்த நடையிலும் ஒன்றுமே பார்க்காமல் வரக்கூடும். ஆனால் வேறு சில சமயங்களில் ஒரே நாளில் 5-6 ஆமைக் கூடுகளை கண்டு பிடிக்க கூடும். ஆகையால் எந்த உத்திரவாதமும் கொடுக்க இயலாது. ஜனவரி மாதம் பாதியிலிருந்து,மார்ச் மாதம் இரண்டாம் வாரம் வரை ஆமைகள் அதிகமாக வரும், அந்த நாட்களில் நீங்கள் ஆமை நடையில் கலந்துக் கொள்ளலாம்.

11. ஆமை நடையில் கலந்துக் கொள்ள நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் ஆமை நடையில் கலந்துக் கொள்ள sstcnchennai@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அஞ்சல் அனுப்பி பதிவு செய்ய வேண்டும். தமிழிலும் அஞ்சல் அனுப்பலாம்.

12. ஆமை நடையில் பங்கேற்க நாங்கள் பணம் செலுத்த வேண்டுமா?

ஆமை நடையில் பங்கேற்க பணம் செலத்த வேண்டிய அவசியம் இல்லை. இது முழுக்க முழுக்க தன்னார்வலர்கள் சேர்ந்து நடத்தும் நிறுவனம்.

13. ஆமை நடையில் கலந்துக் கொள்ள வயது வரம்பு இருக்கிறதா?

வயது வரம்பு என்று கிடையாது. இருந்தாலும் நாம் நடக்கும் துரம் 7 கி.மீ. என்பதால் சிறியவர்களுக்கும் முதியவர்களுக்கும் இரவில் கண் விழித்து நடக்க சிரமமாக இருக்கும். எனவே அவர்களை மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஆமை குஞ்சுகளை கடலில் விடும் போது வந்து கலந்துக் கொள்ளுமாறு பரிந்துரைக்கிறோம்.

14. ஆமை நடையில் மாணவர்கள் மட்டும் பங்கு பெற முடியுமா? அல்லது பெரியவர்களும் பங்கு பெறலாமா?

முன்னரே கூறியது போல ஆமை நடையில் கலந்துக் கொள்ள வயது வரம்பு கிடையாது. பள்ளிகளும் கல்லூரிகளும் மாணவர்களை ஒருங்கிணைத்து எங்களுடன் ஆமை நடைக்கு அழைத்து வருகிறார்கள். ஆமை நடைக்கு வருவதற்கு சுற்றுசூழல் பற்றிய

ஆர்வமும் இரவு முழுவதும் நடக்க தேவையான உடல் பலமும் முக்கியமானது என்று நினைக்கிறோம்.

15.கடற்கரையில் எங்கு நடப்பபோம்?

பொதுவாக கடற்கரை ஓரம் அலைகள் வரும் அளவிற்கு மேலே நடப்போம்.

16. எந்த மாதிரி உடை அணிந்து வருவது?

உங்களுக்கு தேவையானபடி உடை அணிந்துக் கொள்ளலாம். சாதாரனமான செருப்பு அணிந்துக் கொள்வது நல்லது. shoe போட்டு வந்தால் மணலில் நடப்பதற்கும் தண்ணீர் பட்டு விட்டாலும் கடினமாக இருக்கும். மேலும் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மிகவும் குளிராக இருக்கும் காரணத்தால், கதகதப்பான உடை அணிந்து வருவதோ அல்லது ஒரு துணி அதிகமாகவோ கொண்டு வருவதோ நல்லது. கால் சட்டை மற்றும் முக்கால் சட்டைகள் மார்ச் மாதங்களில் அணிந்து வரலாம்.

17. நாங்கள் எதாவது சட்டத்திட்டத்தை கடை பிடிக்க வேண்டுமா?

நாங்கள் நடக்கும் போது அனைத்து வயது மக்களும் இருக்கிறார்கள். எனவே புகை பிடிப்பது மற்றும் குடித்துவிட்டு வருவதை தவிர்க்க வேண்டும். மிகவும் கொஞ்சமாக குடித்திருந்தாலும் வரக் கூடாது.

18.பொறிப்பகத்திற்கு வந்து ஆமை குஞ்சுகளை கடலில் விட உதவி செய்ய முடியுமா?

பொதுவாக ஆமைக் குஞ்சுகள் மார்ச் மாதம் ஆரம்பித்து மே மாதம் முதல் வாரம் வரை வெளியே வரத் தொடங்கும். ஆமைக் குஞ்சுகளை கடலில் விடுவதை பார்க்க விரும்புபவர்கள், எங்களுடன் தொடர்பு கொண்டு வந்து பார்க்கலாம். தினமும் மாலை 5.30 மணிக்கு ஆமைக் குஞ்சுகளை கடலில் விடுவோம். பெசன்ட் நகரில் தியாசபிக்கல் சொசைட்டியின் பின்புறம் உள்ள கடற்கரையில் அடையாற்றின் முகத்துவாரம் அருகில் ஒரு பொறிப்பகம் இருக்கிறது. மற்றொன்று மெரினா கடற்கரை சீனிவாசபுரத்தில் இருக்கிறது.

19.பெசன்ட் நகர் பொறிப்பகத்திற்கு எப்படி வருவது?

பொறிப்பகத்திற்கு வருவதற்கு பெசன்ட் நகர் கடற்கரைக்கு தலப்பாகட்டு உணவகம் வழியாக வந்து, வடக்குபக்கமாக திரும்பி ஊரூர் குப்பம் மீனவ கிராமத்தை தாண்டி உடைந்த பாலத்திற்கு

செல்லம் வழியில் சென்றால், பாலத்திற்கு முன்பாகவே ஒரு பச்சை நிற மூங்கில் வேலி தெரியும் அது தான் எங்கள் ஆமைப் பொறிப்பகம்.

20. மெரினா பொறிப்பகத்திற்கு எப்படி வருவது?

சீனிவாசபுரம் / பட்டினம்பாக்கம் பேருந்து நிலையம் தாண்டி, வலது புறம் திரும்பி சீனிவாசபுரம் கிராமத்தை தாண்டி கலங்கரை விளக்கத்திற்கும் மெரினா கடற்கரைக்கும் எதிர்புறமாக முகத்துவாரத்தை நோக்கி சென்றால், கிராமத்தின் கடைசியில் கடற்கரைக்குள் நுழைந்தால், கடற்கரையில் பொறிப்பகம் உள்ளது.

21. ஆமைக் குஞ்சுகளை கடலில் விட்டு முடிக்க எவ்வளவு நேரம் ஆகும்?

ஆமைக் குஞ்சுகளை கடலில் விடுவதற்கு முன் கேள்வி பதில் நேரம் இருக்கும். மாலை 7 மணிக்கு ஆமைக் குஞ்சுகளை கடலில் விடுவது முடிந்துவிடும்.

ஆமைக் குஞ்சுகள் வெளியே வந்தவுடன் கடலில் விட்டுவிடுவோம். எக்காரணத்தைக் கொண்டும் ஆமைக் குஞ்சுகளை காத்திருக்க வைக்க முடியாது. எனவே தயவு செய்து 5.45 மணிக்குள் வந்து விடவேண்டும்.

நீங்கள் வரும் நாளில் ஆமைக் குஞ்சுகள் வெளியே வருகிறதா? இல்லையா? என்பதை கீழே கொடுக்கப்பட்ட எண்ணிற்கு SMS அனுப்பி தெரிந்துக் கொள்ளவும்.

(1) அருண் - 9789864166 (2) அகிலா- 9940300200 (3) ஷ்ரவன் - 9884461090